பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 02 2025 Thusday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சக்திவாய்ந்த ஊடகமாக வானொலி திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- மத்திய பட்ஜெட்டில் எந்த மாநிலமும் புறக்கணிக்கப்படவில்லை என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

- வருமான வரி சட்டத்தை எளிமைப்படுத்தும் நோக்கில், புதிய வருமான வரி சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- தமிழகத்தில் வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடிக்கு கூடுதலாக காதி துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

- Pittsburg ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் மற்றும் Ramit Tandon இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>

சக்திவாய்ந்த ஊடகமாக வானொலி திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்நாளில் வானொலியில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

செய்தி, கலாச்சாரம், கதை மற்றும் இசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதன் மூலம், மக்கள் இதயங்களை வென்ற ஊடகமாகவும் வானொலி உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் வரும் 23ஆம் தேதி ஒலிபரப்பாகவுள்ள மன்கிபாத் நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

யுனெஸ்கோ-வால் 2011ஆம் ஆண்டு முதல் சர்வதேச வானொலிதினம் அறிவிக்கப்பட்டு, அதற்கு அடுத்த ஆண்டு முதல் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்தும் தற்போதைய சூழலிலும், இந்தியாவில் வானொலி 98 சதவீத மக்களை சென்றடைகிறது.

இதன்மூலம் மக்கள் வாழ்வின் ஒரு அங்கமாக வானொலி திகழ்கிறது என்றால் அது மிகையல்ல.

குடிமைப்பணி தேர்வுகளை எழுதுவோருக்கு வானொலி செய்திகள் சிறந்த பயிற்சியாக உள்ளது என்று சென்னை மண்டல பாஸ்போர்ட் அதிகாரி திரு. விஜயகுமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - விஜயகுமார் 48 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

மத்திய பட்ஜெட்டில் எந்த மாநிலமும் புறக்கணிக்கப்படவில்லை என்று நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டுமே மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பாரபட்சமின்றி வளர்ச்சித் திட்டங்களை மாநில அரசுகளுக்கு வழங்கி வருவதாக அவர் கூறினார்.

ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோவிட் பாதிப்பு காலத்திலிருந்து பொருளாதாரத்தை மத்திய அரசு சிறப்பாக கையாண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான தேசிய ஓய்வூதிய திட்டங்களை ஒருங்கிணைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இந்த ஓய்வூதிய திட்டங்கள் மூலம் 6 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக அவர் கூறினார்.

இந்த திட்டங்கள் மூலம் 60 வயதை பூர்த்தி செய்தவர்களுக்கு மாதந்தோறும் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஓய்வூதிய திட்டங்களை எளிமைப்படுத்தும் நோக்கில் அவை ஒருங்கிணைக்கப்படவுள்ளதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாடுமுழுவதும் கடந்த ஐந்தாண்டுகளில் 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இளையோருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இதற்கென மத்திய பட்ஜெட்டில் 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் ஐந்தாண்டுகளில் நான்கு கோடிக்கும் மேற்பட்ட இளையோருக்கு திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டின் எரிசக்தி தேவை அதிகரித்து வருவதன் காரணமாக, நிலக்கரி உற்பத்தியை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனை தெரிவித்த அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் நோக்கில் நிலக்கரி உற்பத்தி அதிகரிக்கப்படும் என்றார்.

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் நிலக்கரி முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. கிஷன் ரெட்டி கூறினார்.

<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - Song – 8 நொடிகள்)*

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப் பெரிய ஆன்மிக திருவிழாவான மகாகும்பமேளாவில், மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா இன்று பங்கேற்றார்.

சத்திஷ்கர் முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோசாய், அம்மாநில ஆளுநர், அமைச்சர்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அடங்கிய 166 பேர் கொண்ட குழுவினரும் இன்று புனித நீராடினர்.

இன்று மட்டும் 73 லட்சத்திற்கும் மேற்பட்டோரும், இதுவரை 48 கோடியே 29 லட்சத்திற்கும் மேற்பட்டோரும் புனித நீராடியுள்ளனர்.

பக்தர்களின் தேவைகளை அறிந்து அதனை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மத்திய அரசோடு இணைந்து உத்தரபிரதேச அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் காரணமாக பக்தர்கள் சிரமமின்றி புனித நீராடுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

வருமான வரிச் சட்டத்தை எளிமைப்படுத்தும் நோக்கில், புதிய வருமான வரி சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தில் 819 பிரிவுகள் உள்ள நிலையில், புதிய மசோதாவில் 536 பிரிவுகள் இடம்பெற்றுள்ளதாக வருமான வரித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

47 அத்தியாயங்கள் என்பது புதிய மசோதாவில் 23ஆக குறைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சாதிவாரி கணக்கெடுப்பிற்கு லோக் ஜனசக்தி ஆதரவு அளிப்பதாக அதன் தலைவரும் மத்திய அமைச்சருமான திரு. ஷிராக் பஸ்வான் கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வக்ஃப் மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் விரிவாக ஆலோசனை நடத்திய பின்னரே அறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக கூறினார்.

இதுகுறித்து நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில் விரிவாக விவாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பீகார் சட்டப்பேரவைக்கு நடைபெறவுள்ள தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. ஷிராக் பஸ்வான் கூறினார்.

<<<<<>>>>>

தமிழக அமைச்சரவையில் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடிக்கு, காதி துறை கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காதி துறை பொறுப்பை வகித்து வந்த திரு. ராஜ கண்ணப்பன், பால்வளத்துறையை மட்டும் கவனிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினின் பரிந்துரையை ஏற்று இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக ஆளுநர் மாளிகையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

Pittsburg ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் முதல் சுற்று ஆட்டத்தில் 11-7, 11-4, 9-11, 11-7 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Shahjahan Khan-ஐ வென்றார்.

மற்றொரு ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Ramit Tandon 14-12, 11-4, 11-8 என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் Carlos Salazar-ஐ வென்றார்.

<<<<<>>>>>

தில்லி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Kaliyanda Poonacha - ஜிம்பாப்வேயின் Courtney John Lock இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3 2-6, 10-5 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Kaito Uesugi – Shintaro Mochizuki இணையை வென்றது.

<<<<<>>>>>

தேசிய விளையாட்டு போட்டிகளில் தமிழகத்தின் Selena Selvakumar தங்கப்பதக்கம் வென்றார்.

<<<<<>>>>>

ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான பெங்களூரு அணியின் கேப்டனாக Rajat Patidar அறிவிக்கப்பட்டுள்ளார்.

<<<<<END>>>>>